*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் - அறச் சிந்தனைகள்

**முனைவர் இரா.சாந்தி**
**தமிழ்த்துறைத் தலைவர்**
**து.ர்.யு அகர்சன் கல்லூரி**
**மாதவரம், சென்னை -60.**

## முன்னுரை

அறத்தை முன்னிருத்தி பாடும் மரபு தமிழர்களிடையே தொன்று தொட்டு வருகின்ற மரபாகும். அன்பு, அறம், மறம் தமிழ் மக்களின் வாழ்க்கையில் இணைந்துள்ளதை தமிழ் இலக்கியங்கள் மூலம் அறியலாம். அன்பும் அறத்தையும் இல்லறத்தில் போற்றியதுடன், நாட்டைக் காப்பாற்ற மறத்துடன் வாழ்ந்த வீரர்களும் இருந்தனர் என்பதை இலக்கியங்கள் எடுத்துரைக்கப்படுவதை அறியமுடிகிறது. செம்மொழி இலக்கியங்கள் என்று போற்றப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இவ்விலக்கியங்களில் காதலும் வீரமும் பாடுபொருளாக வைத்துப்பாடியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கியப் பாடல்களில் ஔவையார் பாடிய பாடல்களில் தமிழரின் அறச்சிந்தனைகள் பற்றி கருத்துக்கள் அடங்கியுள்ளன என்பதைப் பற்றி இக்கட்டுரையின் வாயிலாக காண்போம்.

## ஔவையார்

காலந்தோறும் ஔவையார் பலர் தோன்றியுள்ளனர், இவர்கள் தங்கள் இலக்கியங்களின் மூலம் சமுதாயத்திற்கு வழிகாட்டியாக வாழ்ந்து வந்துள்ளனர். எட்டுத்தொகை நூல்களான நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களில் ஔவையார் பாடிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. புறநானூற்றில் ஔவையார் பாடிய பாடல்களில் தமிழரின் அறச்சிந்தனைகள் பற்றி கருத்துக்கள் இடம் பெற்றிருப்பது பண்டைய மக்களின் வாழ்க்கை முறையினைத் திறம்பட எடுத்துரைக்கின்றது. ஔவையார் எழுதிய பின்வரும் பாடல் அறம் எத்தகைய பண்பைக் கொண்டு விளங்குகின்றது என்பதை விளக்குகின்றன.

## அறத்தின் இன்றியாமை

அறம் என்பது ஒரு மனிதன் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய தலையாயப் பண்புகளில் ஒன்று. அறம் தான் ஒரு மனிதனுக்கு நற்பேரினைப் பெற்றுத்தருகின்றது என்பதை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து வாழவேண்டும் என்பதை பின்வரும் பாடல்கள் உணர்த்துகின்றது. ஒரு மனிதன் **அறம், பொருள், இன்பம், வீடு** என்னும் நான்கு உறுதிப் பொருள்களின் வழியாக அறத்தை முதன்மைப்படுத்தி வாழவேண்டும் என்பதை அறிவுறுத்துகிறது.

**‘அறம் பாடின்றே ஆயிழை கணவ’** (புறம் :34)
**‘அறத்தால் வருவதே இன்பம்’** (குறள் : 39)
**‘அறநெறி முதற்றே அரசின் கொற்றம்’** (புறம் : 11)

**அறம் செய விரும்பு’ (ஆத்திச்சூடி : 1)**
என்ற நம் முன்னோர்களின் தொடர்களின் மூலம் அறத்தை முதன்மைபடுத்தி, அறத்தையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை அறிமுடிகிறது. புறநானூற்றுப் பாடல்களில் மன்னர்களின் போர் நிகழ்வுகளைப் பற்றி கூறும் வரலாற்றுக் கருவூலமாக இருந்தாலும், அறக்கருத்துகளை எடுத்துரைக்கும் வாழ்க்கை களஞ்சியமாக விளங்குகின்றது. புறநானூறுப் பாடல்களில் **ஈகை, விருந்து புறந்தருதல், சுற்றம் போற்றல்** போன்ற அறக்கருத்துகளைக் காணலாம்.

**ஈகை**

ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஈகைப் பண்பினை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஈகைப் பண்பே ஒருவனுக்குப் புகழைச் சேர்க்கும். தன்னை நாடி வரும் மக்களுக்குத் தங்களால் முடிந்த அளவுக்கு உதவிசெய்தல் வேண்டும். ஈகைப் பண்பினை உடையவர்களை சங்க இலக்கியங்கள் வள்ளல்கள் என்று குறிப்பிடுகின்றது. ஈகைப் பண்பு மழையைப் போன்று விளங்க வேண்டும் என்பதை பின்வரும் பாடல்கள் தெளிவுப்படுத்துவதைக் காணலாம்.

**‘சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு’- (கொன்றைவேந்தன் - 27)**

இப்பாடலில் மற்றவர்களுக்கு ஈந்து மகிழ்வது மனிதனுக்கு அழகாகும். பாற்கடல் நஞ்சினை உண்டு உலக மக்களைக் காத்த முக்கண்ணன் போலவும், அதியமான் தனக்கு கிடைத்த நெல்லிக்கனியின் பயனை உணர்ந்து அதை உண்ணாமல், நீண்ட நாள் வாழவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் ஔவைக்குக் கொடுத்ததைப் போலவும் ஈகைப் பண்புடன் வாழ வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றது.

**ஷஆதல் நின்அகத்து அடக்கிச்**
**சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே’ (புறம் -91)**

பசிக்கு உணவு யார் தருவார் என ஏங்கும் விறலியைக்கண்ட ஔவையார் , நீ வருந்தாதே வானம் வறண்டு போனாலும் அதியமான் வழங்குவதில் தவறமாட்டான் வருந்தாதே என்று பாடினார்.

**ஷஅலத்தற் காலை ஆயினும்**
**புரத்தல் வல்லன் வாழ்க அவன் தாளே’ (புறம் -103)**

நாஞ்சில் நாட்டை ஆண்ட சேர மன்னனின் படைக்குத்துணையாக நின்ற நாஞ்சில் வள்ளுவன் இவற்றைத்தான் வழங்கவேண்டும் என்றில்லாமல் , மலை போன்ற பெருங்களிறு கூட்டத்தை வாரி வழங்கினான். வரிசை அறியாமல் பரிசிலர்க்கு ஆராய்ந்து பார்க்காமல் வழங்கும் இப்படிப்பட்ட ஈகையும் உண்டோ? எனப் பாடுவதைக் காணலாம்.

**ஷ...குன்றத்து அன்னதோர்**
**பெருங்களிறு நல்கியோனே அன்னதோர்**
**தேற்றா ஈகையும் உளது கொல் ’ (புறம் -140)**
**ஷகடவர் மீது இரப்போர்க்கு ஈயும்’ (புறம் -315)**

இப்பாடலில், நெடுமான் அஞ்சி கலையில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு இரக்கும் நேரத்தில் கொடுத்து மகிழ்ந்தான் என்பதை தெளிவுப்படுத்துகிறது.

**ஷஇரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி**
**வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்ளு**
**வாழசெய்த நல்வினை ... ’ (புறம் -367)**

மேலும், அந்தணர்கள் உண்டாக்கும் முத்தீப்போல முவேந்தர்களை நோக்கி ஔவையார், பிறரை வாழ செய்கின்ற நல்வினை மட்டுமே நம்முடன் விண்ணுலகம் வரை வரும். மற்ற செல்வங்கள் வராது. ஆதனால் நாம் உயிருடன் இருக்கும்பொழுது பிறருக்குக் கொடுத்து வாழவேண்டும் என்கிறார்.

## விருந்து புறந்தருதல்

இல்லறத்தின் சிறப்பே வரியவர்களுக்கு விருந்தளித்தலே சிறந்த பண்பாகும்.

**ஷமுறைசெய்து காப்பாற்றும் மன்னன்மக்கட்கு**
**இறை என்று வைக்கப்படும்' (குறள்-388)**

என் மேல் அம்பு தொடுவதற்குள் தடுத்தி நிறுத்தி, நறுமணம் வீசும் தன் கையால் புலால் நாற்றம் வீசும் என் தலையை அன்பாக கோதிவிடுவான். சேயைக்காப்பாற்றும் தாய் போல, தன் நாட்டு மக்களைப்போற்றி காப்பதில் அதியமானுக்கு ஈடு இணையில்லை என்பதை விளக்குகின்றது.

**சிறியகள் பெறினே எமக்குஈயு மன்னே**
**பெரியகள் பெறினே**
**யாம் பாடத் தான் மகிழ்ந்துண்ணு மன்னே"(புறம் -235)**
**ஷகோள்மீன் அன்ன பொலங்கலத்து அளைஇ**
**ஊண்முறை ஈத்தல் அன்றியும் ,கோள்முறை**
**விருந்துஇறை நல்கியோனே... ' (புறம் -391)**

பொருட்டெழினி தன்னைப்பாடி வந்த இரவலர்க்கு உடையும் உணவும் அளித்தது மட்டுமின்றி, அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் முறைப்படி விருந்தளித்தான்.

## இனியவன்

மக்களுக்கு மன்னனாக மட்டுமின்றி இனிய தலைவனாகவும் விளங்குகின்றான். நீர் நிலையில் சிறுவர்களோடு விளையாடும் பெருங்களிறு போல இனிமைத் தரக்கூடிய இனியவனாக மன்னன் விளங்குகிறான் என்பதை பின்வரும் பாடல் உணர்த்துகின்றது.

**"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாலின்**
**நீர்த்துறை படியும் பெருங்களிறு போல**
**இனியை பெரும, எமக்கே" (புறம் -94)**
**"ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்**
**பலநாள் பயின்று பலரொடு செல்லினும்**
**தலைநாள் போன்ற விருப்பினன் மாதே" (புறம் -101)**

ஊஒரு நாள், இரண்டுநாள் ,மட்டுமின்றி பல நாள் பலரோடு சேர்ந்து சென்றாலும் முதல் நாள் போலவே , இன்முகத்ததுடன் பரிசுகளை வறியவர்களுக்கு வாரி வழங்குவான்.

### சுற்றம் போற்றல்

தன்னை நாடி வரும் இரவலர்களைச் சுற்றம் போல் பாதுகாத்திட வேண்டும். இதற்கு அதியமான் விதிவிலக்காகத் திகழ்கின்றான். கடையெழு வள்ளல்களில் ஒருவனான அதியமான் வகை அறியாமல் வாரி வழங்கும் வள்ளல் தன்மைக் கொண்டவனாத் திகழ்துள்ளார். அதியமான் செல்வத்தில் குறை ஏற்படினும், ஏழை மக்களை அருகில் வைத்து போற்றும் உறவினராகத் திகழ்ந்தான் என்பதை பின்வரும் பாடல்வரி குறிப்பிடுகின்றது.

**"இல்லோர் ஒக்கல் தலைவன் " (புறம் -95)**
**"வான் அறியல என்பர் அடுபசி போக்கல்**
**அண்ணல் யானை வேந்தர் " (புறம் -390)**

இப்பாடலில், புரவலர்கள் எந்த மன்னனிடம் பரிசில் வேண்டி செல்லவில்லை. மழைக்கும் அவர்களின் பசி தெரியவில்லை. ஆனால் மன்னன் அதியமான் அவர்களின் பாசி நிற அழுக்காடையை நீக்கி, புத்தடை அளித்து,அமிழ்தன்ன உணவை அளித்தது மட்டுமின்றி , அவர்கள் சுற்றத்தார்க்கும் வேண்டிய அளவு கொடுத்தார் என்ற செய்தியை வெளிப்படுத்துகிறது.

**முடிவுரை**

பண்டையகால மக்கள் அறத்தைப் பாடல்களில் சுட்டிச் செல்லவில்லை, வாழ்ந்துகாட்டிச் சென்றுள்ளனர் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களில் ஔவையார் பாடல்களில் வரலாற்றுச் செய்திகளுடன் அறத்தைப் புலப்படுத்தியிருப்பது ஒரு மனிதன் கடைபிடிக்க வேண்டிய அறங்களாக அறத்தின் இன்றியமையாமை, ஈகை, விருந்தோம்பல், சுற்றம் காத்தல், இனிய சொற்களைக் கொண்டு பேசுதல் ஆகியவை இக்கட்ரையின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.